**தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கடன் இணக்க சபைத் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுக்களுடன் ஏசீஏ 5 படிவத்தின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் ஆண்டின் போதான மொத்த பெறுவனவு ரூபா 1,615,077 ஆக இருந்ததுடன் அதனை நிதிச் செயலாற்றல் கூற்றின் வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் உள்ளடக்கப்படாதிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானமற்ற பெறுவனவுகள் அந்த அளவால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றானது ஏசீஏ 1 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களையும் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. விபரங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் ஆண்டின் போதான மொத்த பெறுவனவுகள் தவறுதலாக உள்ளடக்கப்படவில்லை. இது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமலிக்க கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) ஒரு வருமானத் தலைப்பின் கீழ் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 300,588 ஆன மொத்த | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் | 20-03-99-00 ஆம் இலக்க வருமானத் தலைப்பின் கீழ் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 300,588 |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ஏசீஏ-3 படிவத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் ஏனைய வருமானங்கள் ரூபா 300,588 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் 7(ii) ஆம் பந்தியின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக வருமானத்தை சேகரிக்கின்ற ஏனைய திணைக்களங்கள் அச் சேகரித்த வருமானங்களை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்ட கட்டுநிதிகயாகக் கருதி ஏசீஏ-3 படிவத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | தொகையான முழு வருமானத்தில் ரூபா 231,475.50 தொகை திறைசேரி பிரதிச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எங்களது திணைக்களம் B தரமான திணைக்களமாகக் காணப்படுவதனால் சேகரிக்கப்பட்ட வருமானம் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியாகக் கருதப்படாது திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு வருமானத் தலைப்பு 20-03-99-00 இன் கீழ் செலவு வைக்கப்படுகின்றது. எஞ்சிய வருமானமாகிய ரூபா 69,112.50 பணம் பதவியணியினருக்கான படியாகச் செலுத்தப்பட்டுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறியாமையின் அடிப்படையில் இவ்வருமானம் ஏசீஏ-03 படிவத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமல் கவனத்திக் கொள்ளப்படும். |
| (இ) | முற்பணக் கொடுப்பனவுகள்<br>---------------------------------------------- | | |
| | ஏசீஏ - 5 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 1,253,083 ஆக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 943,691 ஆகக் காட்டியதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மொத்த செலவுகள் ரூபா 309,392 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று ஏசீஏ-01 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | நிதி செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகளாகப் பதியப்பட்டிருந்ததானது ரூபா 943,691 தொகையான பணமாக மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் மாத்திரமாகும். ரூபா 309,392 தொகையான குறுக்குப் பதிவுகள் மூலம் மேற்கொண்ட முற்பணக் கொடுப்பனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறியாமையின் காரணமாக குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப் பட்டிருக்காததனால் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமலிருப்பதற்கு கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தின் செலவுப் பேரேடு, மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பதிவுகளின் பிரகாரம் சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழிய பிரதிபலன் செலவு விடயங்களின் செலவுகள் ரூபா 7,233,215 ஆக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அச்செலவு ரூபா 6,638,638 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மீண்டுவரும் செலவுகள் ரூபா 594,577 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றானது ஏசீஏ - 1 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | இது விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறியாமையின் அடிப்படையில் இடம்பெற்ற தவறாக இருந்ததனால் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமலிருப்பதற்கு கவனித்துக் கொள்ளப்படும் என தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (உ) | வருமான தலைப்பு 20-03-99-00 இன் கீழ் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 231,475 தொகை திறைசேரி பிரதிச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 69,113 தொகை பதவியணியினருக்கான படியாக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 300,588 தொகையான மொத்த செலவு நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாததன் காரணமாக மொத்தச் செலவு அப்பெறுமதியால் குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றானது ஏசீஏ - 1 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | ரூபா 300,588 தொகையான வைப்பு கொடுப்பனவு செலவுகள் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் தவறுதலின் அடிப்படையில் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமைக்கு கவனித்துக் கொள்வதாகத் தெரிவிக்கின்றேன். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களுடன் ஏசீஏ - 6 படிவத்தில் சொத்துக்கள் குறியீட்டு இலக்கம் 6112101 ஆம் இலக்கத்தின் கீழ் திணைக்களத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் என்பவற்றின் மீதியும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றுக்கான ஒதுக்க மீதியும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றானது ஏசீஏ - 1 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | சொத்துக்களின் குறியீட்டு இலக்கம் 6112101 இன் கீழ் திணைக்களத்திற்குச் சொந்தமான உரிய மோட்டார் வாகனம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சிடமிருந்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒரு சொத்தாக இருப்பதனால் அந்த மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே, மோட்டார் வாகனத்தை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏசீஏ - 5 படிவத்தின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் ஆண்டின் போது பணமாக வரவு வைத்தல்களுக்கும் செலவு வைத்தல்களுக்கும் இடையிலான வித்தியாசம் ரூபா 594,557 ஆகும். எனினும், மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றம் ரூபா 943,691 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் ரூபா 349,134 ஆல் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றானது ஏசீஏ - 1 இலிருந்து 6 வரையான படிவங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் (i) இலிருந்து (viii) வரையான விபரங்களை | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் ஆண்டின் போது பணமாக மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்கள் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறிவின்மையின் காரணமாக இடம்பெற்ற தவறு என்பதனால் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு இடம்பெறாமைக்கு கவனத்திக் கொள்வதாக தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | | அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.4 எல்லைகளை மிகைத்தல்

அரசாங்கத்தின் முற்பணச் செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்கான மிகைத்தல் மற்றும் அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 23101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கு தொடர்பாக விதிக்கப்பட்ட ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 400,000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது உள்ளபடியான பெறுவனவு ரூபா 349,134 ஆக இருந்ததன் காரணமாக பெறுவனவு எல்லையை அடைந்து கொள்ளாமை ரூபா 50,866 ஆகும். | தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 118 ஆம் இலக்க 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கு தொடர்பான ஆலோசனைகளை உள்ளடக்குவதற்கும் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சிற்கும் திணைக்களத்திற்கும் இடையிலான கடன் மீதிகளைத் தீர்த்து வைக்கும் போது உருவாகியுள்ள வரவு வைத்தல்களும் செலவு வைத்தல்களும் உச்ச எல்லைக்குள் மற்றும் ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை தீர்மானிக்கும் போது கணக்கிற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. | இத்திணைக்களத்தின் முற்பணங்கள் பீ கணக்கில் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 349.134 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 50,866 ஆல் ஆகக்குறைந்த பெறுவனவு எல்லையை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. எனவே திணைக்களத்தின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையினை ரூபா 349,134 ஆக திருத்தம் செய்வதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சின் சிபார்சுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக BD/PE2/76101/03/2002 ஆம் இலக்க 2019 பெப்ரவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 மூலதன செலவு விடயங்கள் மற்றும் 09 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடான ரூபா 27.04 மில்லயனில் ரூபா13.53 மில்லியன் அல்லது தேறிய நிதிஏற்பாட்டில் 21 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரையான வீச்சுடைய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சிக்கனம் மற்றும் செயற்திறன் பற்றி கவனத்தில் கொண்டு சரியான செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | நிதி ஏற்பாடு சேமிப்பாகியதற்கு பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தது.<br><br>(i) செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக செயலாளருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை மேம்படுத்துதல் செய்யாமையும் சாரதிப் பதவி வெற்றிடமாக இருந்தமையும்.<br><br>(ii) எதிர்பார்க்கப்பட்ட மணைப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமை<br><br>(iii) வெற்றிடங்களின் காரணமாக உத்தியோகத்தர்களை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக அனுப்புவதற்கு முடியாமை.<br><br>(iv) எதிர்பார்க்கப்பட்ட நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களின் அளவை விட குறைந்த அளவினை அமுல்படுத்துதல்.<br><br>(v) சபையின் அங்கத்தவர் படியை திருத்தம் செய்தல் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காமை.<br><br>(vi) செயலாளர் பதவிக்கான எரிபொருள் படிக்கான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டமை மற்றும் 2018 மே மாதத்திலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரை சாரதி பதவி வெற்றிடமாக இருத்தல்.<br><br>(vii) கணனி இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரங்கள் சிக்கனமாக பாவித்ததன் காரணமாக பராமரிப்புச் செலவு குறைவடைந்தமை |

(viii) திணைக்களத்தை அதிக இடவசதியுள்ளதாக ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் எதிர்பார்ப்பில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதனை அமுல்படுத்த முடியாதிருந்தமை

(ix) வீட்டு / ஆதனக் கடன்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள் குறைவடைந்தமை

## 2.2 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வங்கிக் கணக்கில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பணம் பெற்றுக்கொள்ளாத ரூபா 14,350 பெறுமதியான 06 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பணமாக மாற்றாத காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பணம் பெறாத காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் அக்காசோலைகளுக்கு பணம் செலுத்தப்படவில்லை என்பது வங்கியிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதுடன் ஏனைய தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான கடந்த 08 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் சதவீதம் மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 29 சதவீதத்திலிருந்து 51 சதவீதம் வரையிலான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது. மேலும் மேற்கூறிய காலப்பகுதியில் வருடாந்தம் | திணைக்களத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோள் நிலையான ஆதனங்கள் சம்பந்தமாக அடகுவைத்தல், வாக்குறுதி உறுதிகள், கடன் கொடுக்கல் வாங்கல்கள் என்பன சம்பந்தமாக எழுதப்பட்ட உரிமை மாற்றல் உறுதிகள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் | கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற சனாதிபதியின் உத்தியோகபூர்வ செயற்பாடுகளை உள்ளடக்கி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டதன் காரணமாக வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் அளவு அதிகரிப்பதுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இத்திணைக்களத்துடன் இணைந்த |

| | | |
|---|---|---|
| திணைக்களத்திற்கு புதிதாக கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 388 இலிருந்து 514 வரையான அளவினைக் கொண்டிருந்தன. 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 381 ஆக இருந்ததுடன் அவை 18 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதற்கிணங்க நாட்டின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவுசெய்யப்பட வேண்டியிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 785 ஆக இருந்ததுடன் அந்த எண்ணிக்கையில் 25 சதவீதம் அளவானவை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வழக்குகள் என்பது அவதானிக்கப்பட்டது. | தொடர்பாக இணக்கத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களை வரச் செய்வதாக இருந்ததினால் அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். | 05 கிளைச் சபை அலுவலகங்கள் கம்பஹா, களுத்துறை, குருணாகல், மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தோற்றுவிப்பதற்காக நடவடிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பமாக கம்பஹா கிளைச் சபையை தோற்றுவிப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதுடன் 2019 யூலை மாதம் கம்பஹா கிளையை திறப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது. 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வழக்குகள் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் வருகை தராமை, உரிய சாட்சிகளையும் பெற்றுக் கொள்வதில் தாமதம், என்பவற்றின் காரணமாக இணக்கத்திற்கு வருவதற்குத் தாமதித்தும் கடன் இணக்க சபையால் அந்த வழக்குகளை இணக்கத்திற்கு உட்படுத்துவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் பிரதான கடமைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், பெறுகைத் திட்டம், கால அட்டவணை, செயற்பாடுகளின் எதிர்பார்த்த விளைவுகள் / பெறுபேறுகள், கட்டுநிதி திட்டம் முதலியன உள்ளடக்கப்படாததனால் அந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையினை 2019 மார்ச் 15 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த போதிலும் பொருட்கள் பற்றாக்குறை மற்றும் மிகைகளை அறிக்கையிடுதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே பொது 47 அறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்ய வேண்டிய பொருட்களின் வகைப்படுத்தலும் செய்யப்படவில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கையை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கைக்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்ததுடன் 2019 பொருள் மெய்மையாய்விற்கான சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. |

### 4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த செயலாளர் பதவி ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவிக்காக காலத்துக்குக் காலம் பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது செயலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் செயலாளர் பதவி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவிக்காக அடிக்கடி பதில்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதுவரை செயலாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) மூன்றாம் மட்டத்தைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்தாளர் பதவிகள் மூன்றும் 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2014 யூன் மாதத்திலிருந்து நீதி அமைச்சிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டு | - மேற்படி - | திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் பதவி மூன்றும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் நீதி அமைச்சிடமிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டு சுருக்கெழுத்தாளர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது சுருக்கெழுத்தாளர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை |

சுருக்கெழுத்தாளர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்ததன் பின்னர் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கும் அது தொடர்பாக தகைமைகளைப் பூர்த்தி செய்த சுருக்கெழுத்தாளர்கள் இல்லாததன் அடிப்படையில் தொடர்ந்தும் வெற்றிடம் அவ்வாறே காணப்பட்டது.

திருத்தம் செய்யப்பட்டு அங்கீகாரத்திற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.